**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

---

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI**

**C.C.No.09/2023**

PROSECUTION WITNESS No. PW2

| | | |
|---|---|---|
| Name | : | Mr.Rooban Loganathan |
| Father Name | : | |
| Age | : | |
| Address | : | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 13th day of September, 2024.

---

எதிரி காணொளி மூலம் ஆஜர்.

முதல் விசாரணை:

நான் தற்போது இந்தியன் வங்கி, புரசைவாக்கம் கிளையில் மேலாளராக பணிபுரிகிறேன். 17.09.2021 முதல் 01.12.2021 வரை நான் , இந்தியன் வங்கி , MLA Hostel,சென்னை, கிளையில் மேலாளராக பணியில் இருந்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் E-mail, இந்தியன் வங்கி தலைமையகம், Anti Money Laundering Cell-ல் இருந்து அமலாக்கத்துறை துணை இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் எனது பெயர் Branch Manager column-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி E-mail- உடன் 25.05.2006 முதல் 18.12.2021 வரையிலான திரு.செந்தில் பாலாஜியின் வங்கி கணக்கு எண் 705963879 கணக்கு பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. Copy of Bank statement of V.Senthil Balaji in Indian Bank Account Number – 705963879 along with email - **Ex.P12 (50 Sheets).**

**குறுக்கு விசாரணை**

Ex.P12-ல் உள்ள வங்கி கணக்கு பட்டியலின், முதல் பக்கத்தில் 19.08.2021, 13.13.46 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அதில் சொல்லப்பட்டுள்ள நேரம் எதை குறிப்பிடுகிறது என்றால் மேற்படி Statement Generate செய்யப்பட்ட நேரத்தை குறிக்கும். Ex.P12-ல் Subject-ல் குறிப்பிட்டுள்ள கடிதம் 13.12.2021 தேதியில் பெறப்பட்டுள்ளது என்றால் மேற்படி கடிதம் எங்களது தலைமை அலுவலகத்தால் பெறப்பட்ட ஒன்று. மேற்படி கடிதத்தின் முதல் பக்கத்தில் ZIP file ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த File-ல் வங்கி கணக்கு பட்டியல் முழுவதுமாக இருந்தது என்றால் சரிதான். Ex.P12-ல் கடிதத்தின் முதல் பக்கத்தில் மேற்பகுதியில் இடது பக்கத்தின் குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரம் என்பது E-mail, Print out எடுக்கப்பட்ட தேதி மற்றும் நேரம். அதனை நாங்கள் Print out எடுக்கவில்லை என்றால் சரி. மேற்படி வங்கி கணக்கு பட்டியலை நான் அனுப்பவில்லை என்றால் சரி. Ex.P12 கடிதத்தில் மற்றும் வங்கி கணக்கு பட்டியலில் எனது பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதை தவிர, அந்த ஆவணம் குறித்து எனக்கு வேறு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை**

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

-----------------------------------------------------------------------------------------

**<u>IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI</u>**

**<u>C.C.No.09/2023</u>**

<u>PROSECUTION WITNESS No. PW3</u>

Name : Shri. Gawtham Raj

Father Name :

Age :

Address :

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 13th day of September, 2024.

---

Accused produced through VC.

**<u>Chief Examination:</u>**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, இந்தியன் ஓவர்சிஸ் வங்கி இளையாம்பாளைய கிளையில், துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். 01.11.2018 முதல் 16.07.2022 வரை நான் கரூர், மண் மங்கலம் கிளையில் மேலாளராக பணிபுரிந்தேன். 21.04.2022 அன்று அமலாக்கத்துறை அதிகாரியின் வேண்டுகோளின் அடிப்படையில் திருமதி. மேகலா அவர்களின் வங்கி கணக்கு எண் 341101000006699 தொடர்புடைய 14.03.2018 முதல் 19.04.2022 வரையிலான வங்கி கணக்கு பட்டியலை நான் அமலாக்கத்துறைக்கு கடிதம் மூலமாக அனுப்பினேன். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கடிதம் தான் என்னால் அனுப்பப்பட்டது. வங்கி கணக்கு பட்டியலின் ஒவ்வொரு பக்கத்திலும் நான் கையெழுத்திட்டு, அலுவலக முத்திரை வைத்துள்ளேன். Copy of Bank statement of Megala, W/o.Senthil Balaji in Indian

Overseas Bank Account Number – 341101000006699 along with the letter- **Ex.P13( 5 Sheets).**

**குறுக்கு விசாரணை**

Ex.P13-ல் உள்ள கடிதம் வழங்கப்படும் போது நான் மேற்படி கிளையின் மேலாளராக இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தின் நகலை கொடுக்கவில்லை என்றால் சரி. மேற்படி கடிதத்தில் எந்த தேதி முதல் எந்த தேதி வரையிலான காலத்திற்கு வங்கி கணக்கு பட்டியல் வழங்குவதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள List of Accounts in the name of Smt.Megala, Opening Forms and KYC, ஆகியவற்றை நான் அமலாக்கத்துறைக்கு அனுப்பவில்லை என்றால் சரி தான். Statement of Account and Letter(Ex.P13) தொடர்பாக அமலாக்கத்துறை துணை இயக்குநர் என்னை நேரில் சந்தித்து பேசினார் என்றால் இல்லை. அவர் தொலைபேசி அல்லது Whatsapp மூலமாக என்னை தொடர்புகொண்டாரா என்றால் இல்லை.

**மறு விசாரணை**: இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |